INTACH MADURAI
Indian National Trust for Art and Cultural Heritage

இந்தியக் கலை மற்றும் பண்பாடு மரபின்
தேசிய அறக்கட்டளை - மதுரை பிரிவு

மதிரய்

வைகாசி 2023
வெளியீடு மலர் 1 இதழ் 2



மீனாட்சியம்மை முடிசூட்டு விழா
30/4/23

பாண்டியக்குல பேரரசி
உலகத்தின் முதல் பெண்மணி
மதுரையை ஆளும் மங்கையர்க்கரசி
மக்கள் உள்ளம் எல்லாம்
கொலுவிருக்கும் மளோன்மணி
எம்பெருமாட்டி
திருஆலவாய் உடைய
அங்கயற்கண்ணி தடாதகை நாச்சியார்
பராக்! பராக்! பராக்!


பாண்டியக்குல வேப்பம் பூந்தழை மாலை அணிவித்து மதுரை ஆட்சி ஏற்கும் அங்கயற்கண்ணி தடாதகை நாச்சியார், பேரரசியாக முடிசூடப்பெறும் பட்டாபிஷேக வைபவம் ஆண்டுதோறும் சித்திரை திருவிழாவில் நடைபெறும்.

சித்திரை உழவு

‘நீர் நுங்கின் கண் வலிப்பக்
கான வேம்பின் காய் திரங்கக்,
கயங் களியும் கோடை ஆயினும்..’
- புறநானூறு 389
(எட்டுத்தொகை தொகுப்பில் எட்டாம் இலக்கியம்)

பாடலில் கோடைக்காலம் குறிக்கப்படுகிறது. நுங்கு கண் உறுதிபெற நீர்கொண்டு விளையும் காலம். திரள காட்டு வேம்பு காய்க்கும் காலம். குளத்துநீர் குறைந்து களிமண்ணாகும் காலம்.

கொளுத்தும் வெயில் சித்திரை விழா தொடங்க குளிர்விக்கும் கோடை மழையும் கனமழையும் பெய்தவாறு பொய்யா நிலவறட்சி நீங்கி பசுமை படர்ந்து காணப்படுகிறது. தமிழகத்தின் விவசாயப் பரப்பில் பெரும்பாலானவை மானாவாரி கரிசல் நிலப்பகுதிகள். மானாவாரி விவசாயம் சித்திரையில் துவங்கும். ஓர் விழாவாகவே ‘சித்திரை ஏர் பூட்டுதல்’ அல்லது ‘பொன்னேர் பூட்டுதல்’ நடக்கும். சித்திரையில் உழவு செய்தால் நல்ல விளைச்சல் உண்டாகும் என்பது நம்பிக்கை. ‘சித்திரை மாத உழவு, பத்தரை மாற்றுத்தங்கம்’. கன்பது பழமொழி.



ஆக்கம் தொகுப்பு அமைப்பு: வாணி, மதன்ராஜ், பொன்மீரா, நிக்கோலஸ், பவளமணி

திருவிழாவில் உறுப்பினர் பங்கேற்பு



தேரு பாக்க வந்திருக்கும் சித்திரப் பெண்ணே
அனைத்து வயதினரும் தேரைக் காணவும் வீதி உலாவில் கலந்துக்கொள்ளவும் கூடுவர்.



கல்யாண சமையல் சாதம்
நகர மக்கள் கல்யாண விருந்து வேலையிலும் ஈடுபட்டு யாவருக்கும் பந்தியில் பரிமாறுவர்.



விசிறி தாத்தா
நடராஜன் ஆடிப்பாடி வீசும் தொண்டர்.



__சித்திரை தேரோட்டம்__ பட்டையிடுவோரும் நாமமிடுவோரும் பங்கேற்கும் திருவிழா



கட்டுத்தேர் துணிமணி மற்றும் வண்ணமலர் அலங்காரத்தில் களைகட்டும் சித்திரத்தேர்.

குரவையர் குலவை

தமிழரது மங்கல ஒலி குலவை. பெரும்பாலும் பெண்களால் எழுப்பப்படும் மகிழ்வொலி. இறை வழிபாட்டில் 'குலவை இடுங்க ஆத்தா' என்று கேட்டுக்கொண்டால் நாவால் குழறி மகிழ்வோடு 'உலுலுலுலுலுலு' ஓசை எழுப்புவர். திருவிழாவிலே கூடியிருக்கும் மக்கள் ஆரவரிக்க குலவையிடுதல் மெய்சிலிர்க்கச் செய்யும். பலருக்கும் சாமி வரவழைத்திடும். சித்திரை திருவிழாவில் கள்ளழகர் வருகையை குலவை பாடல் வாயிலாக மக்கள் எழுச்சியடைய மீண்டும் மீண்டும் ஒலிபரப்புகின்றனர்.

குலவைக்கு கோர்வையாய் கொம்பொலியும் உருமிமேளமும் சேர்த்து 'தேனிசைத்தென்றல்' தேவா பல்லாண்டு காலத்துக்கும் மக்கள் கூத்தாடிக் களிக்கும்படி இசைத்துள்ளார். கள்ளழகர் திரைப்பட பாடலாக வெளிவந்த முதல் கால் நூற்றாண்டுதோறும் வெற்றி வலம் வந்துள்ள பாடல். இப்பாடலை மற்றுமொரு இசையமைப்பாளர் இராஜ்குமார் உடன்பாட தேவா பரவசமாய் பாடியுள்ளார்.

வெள்ளிவிழா காணும் பாடலை இயற்றிய 'கவிப்பேரரசு' வைரமுத்து, தொடரும் வழக்கில் பண்பட்ட மக்கள் உணர்வுப் பொங்க பின்பற்றும் மரபினைக் கருத்தில் கொண்டு மதுரை பண்பாட்டுப்பாடலாக அமைத்தது சிறப்பு.

வாராரு வாராரு அழகர் வாராரு வாராரு வாராரு அழகர் வாராரு
சப்பரம் ஏறி வாராரு நம்ம சங்கடம் தீர்க்க போறாரு உலகம் காக்க வாராரு உள்ள கலகம் தீர்க்க போறாரு
வெட்டவெளி பொட்டலிலே சாதி சனம் கூட்டியே கட்டழகையும் கண்ணழகையும் பட்டழகையும் காட்டியே
வாராரு வாராரு அழகர் வாராரு
ஆகாயம் பூமி எல்லாம் ஆட்டி வச்சவர் அழகரு ஆட்டி வச்சவர் அழகரு ஐம்பூதம் பிரிஞ்சிருந்தத கூட்டி வச்சவர் அழகரு கூட்டி வச்சவர் அழகரு
சமயங்களில் வேற்றுமையை பூட்டி வச்சவர் அழகரு பூட்டி வச்சவர் அழகரு சமயம் வந்தா சக்கரத்தை தீட்டி வச்சவர் அழகரு தீட்டி வச்சவர் அழகரு

முந்துது முந்துது சாதி சனம் அட அழகர் கண்ணுல சிக்கலயே வந்தது வந்தது கோடி சனம் நம்ம வைகை நதிக்கரை பத்தலையே
வாராரு வாராரு அழகர் வாராரு வாராரு வாராரு அழகர் வாராரு
சாமி கண்டதும் பாதி சனங்க சாமியேறி ஆடுதே சாதி சனங்க கோடி சனங்க சாதி மறந்து கூடுதே
உச்சி அழகு பார்த்த பிறகு உச்சந்தலையில் ஏறுதே சண்டை மறந்து சத்தம் மறந்து சச்சரவுகள் தீருதே
வெள்ளி மலையில சாமியாடி இது ஏழைங்க பக்கமே நிக்குமடி நன்மையடி தினம் நன்மையடி இனி நாடு முழுக்க நன்மையடி

வெறும் தொட்டா துளங்கும் காலமடி நம்ம வெற்றிக்கு என்னைக்கும் வெற்றியடி கொட்டோ கொட்டுனு கொட்டுமடி செல்வம் கூரைய பிரிச்சு கொட்டுமடி
வந்தோம் திரண்டு வந்தோம் மதுரை வந்தோம் அழகர் வாழியவே
கண்டோம் அழகர் கண்டோம் மகிழ்வு கொண்டோம் மதுரை வாழியவே
கொண்டோம் உணர்ச்சி கொண்டோம் எழுச்சி கொண்டோம் இதயம் வாழியவே
தத்தோம் தகிட தத்தோம் தகிட தத்தோம் பாடி ஆடுகவே
தத்தோம் தகிட தத்தோம் தகிட தத்தோம் பாடி ஆடுகவே


'நறவு நாள்செய்த குறவர் தம் பெண்டிரொடு
மான் தோல் சிறு பறை கறங்க கல்லென
வான் தோய் மீமிசைஅயரும் குரவை'
– **மலைபடுகடாம்** 318-322 (**பத்துப்பாட்டு தொகுப்பில் பத்தாவது இலக்கியம்**)

திருத்தமாகச்செய்யப்பட்ட வேலையுடைய தலைவனுக்கு(நன்னனுக்கு) புதிய குடியிறையாக அமையும் என்று கள்ளை (அரசனுக்கு) நாள்செய்வதற்காகச் செய்த குறவர்கள் தம் பெண்களோடு மான் தோலால் செய்யப்பட்ட சிறுபறையைச் சுழற்ற கல கல என்னும் ஓசையுடன்,
விண்ணைத் தொடும் மலையுச்சியில் வழிபாடுசெய்ய எழுப்பும் குலவை ஒலியும்...

பல்லுயிர் பாறை: அரிட்டாபட்டி








இந்தியக் கலை மற்றும் பண்பாடு மரபின் தேசிய அறக்கட்டளை - பாலக்காடு ஒருங்கிணைப்பாளர் அருண் நாராயணன் முதன்மைறையாக மதுரை வர விசாரித்தார். மதுரையில் திருவிழா நடைபெறுவதால் தயங்கினார். என்றாலும் வந்திருந்து வியந்தார். விழாவிற்காக நகரத்தூய்மை பேண வழி செய்யுங்கள் என்கிறார். கால்வாய் பராமரிப்புக்கு உதவிட முன்வருகிறார். வரைகலை வடிவமைப்பாளர் பார்வையில் அவர் பகிரும் சில புகைப்படங்கள்...





‘உலக தினம்’ பொருளுடைய ‘அஸ்யூடு’ எனும் ஜப்பானிய சொல்லால் ஒரு விளையாட்டினை மதுரை இளைஞன் அப்துல் ரஹ்மான் கண்டுபிடித்துள்ளார்.

ஒரு துளி தண்ணீருக்காகவும், மரத்துக்காகவும் மனிதரும் விலங்குகளும் இடம் பெயர்ந்து செல்லும் காலம் வந்தால் என்னவாகும் எனும் சூழலின் அடிப்படையில் ஆட்டக்காய் நகர்த்தும் விளையாட்டு. உலக வரைப்பட அட்டையில் பத்து-பத்து காய்களை வைத்து விளையாடப்படுகிறது. எதிர்வரும் பிறர் ஆட்டக்காய் நகர வழிவிட வேண்டும். ஒரே நேரத்தில் நாற்பது நபர் விளையாடும் வண்ணம் விளையாட்டு நிலை நூறு வரை அமைக்கப்பட்டுள்ளது. உலகில் உள்ள உயிரினங்கள் அமைதியாக வாழும் நாளை எதிர்நோக்கி விளையாட்டுப் போக்கில் உன்னத எண்ணம் வளர்க்கும் சீரிய முயற்சி.



Paraechinus Nudiventris

சென்னை முள்ளெலி அல்லது வெற்று வயிறு முள்ளெலி என்பது தென் கிழக்கு இந்தியாவின் வறண்டப் பகுதிகளில் காணப்படும் முள்ளெலி இனம் ஆகும்.


7 முதல் 15 செமீற்றர்கள் நீளமுடன் ஒரு சிறிய தேங்காய் அளவு இருக்கும். இதன் உடலின் மேல் 2 முதல் 3 செமீற்ரர்கள் முட்களைக் கொண்டிருக்கிறது. இரவாடி உயிரினமான இது பூச்சிகள், தவளைகள், பல்லிகள், சிறிய ஊர்வன போன்றவற்றை இரவு நேரங்களின் வேட்டையாடி உட்கொள்கிறது.

தெரிக்காடுகள், புதர்கள், வறண்ட நிலப்பகுதிகள், மேலும் உயரமான மலைப்பகுதிகள் போன்றவற்றில் வாழுகிறது. பூச்சிகளை இவை அதிகமாக உட்கொள்வதால் சங்கிலியின் தொடர்புக்கு உறுதுணையாக இருக்கிறது. இந்தியாவின் தென்மாநிலங்களுள் ஒன்றான தமிழ் நாட்டில் மட்டும் தற்பொழுது காணப்படுகிறது.



மதுரை இடையபட்டி கோயில் காட்டில் உள்ள தென்னிந்திய முள்ளெலி

உலக விலங்கியல் அறிஞரால் அழிந்ததாகக் கருதப்பட்ட, இச்சிற்றினத்தைப் பற்றிய ஆய்வு விவரங்கள் அதிகமில்லை. கடந்த 10 ஆண்டுகளில் 80% அழிந்துவிட்டதாக தெரிகிறது. அழியும் நிலையுள்ள முள்ளெலி இனமாக, பன்னாட்டு இயற்கைப் பாதுகாப்பு அமைப்பால் அறிவிக்கப்பட்டுள்ளது.



செய்தி 03: ‘23/4/23 உலக புத்தக நாளில் மதுரை கோ. சசிகலா சங்க இலக்கியத் தரவுகளையும் மையமாகக் கொண்டு எழுதிய நூல் வெளிவந்தது. தேவைக்கு அணுகலாம்.

பார்க்கவும் படம் உணர்த்தி உரைப்பதென்ன?!

